# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.60/2022 |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | **அ.சா.1** |
| Name : | | ஐயம்மாள் |
| Father's/Husband Name: | | **முத்துசாமி** |
| Village : | | **கொட்டரை** |
| Taluk : | | **ஆலத்தூர்** |
| Age : | | 76 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 28.06.2022

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனக்கு தேதி ஞாபகம் இல்லை. சுமார் 8 மாதங்களுக்கு முன்னால் நான் தெற்கே இருந்து வடக்கு நோக்கி நான் போய் கொண்டிருந்த போது என் பேச்சை தான் நீ பேசி கொண்டிருக்கிறாய் என்று எதிரி படிர் படிர் என்று என்னை அடித்து சேலை பிடித்து இழுத்து இந்த வீதியில் வந்தால் மயிரை அறுத்து விடுவேன் என்று சொன்னார். எனது மருமகள் கிட்ட வந்து விட்டாள். என் மருமகள் என்னை அழைத்து வந்ததும் என் வீட்டுக்கருகில் திரும்ப வந்து படிர் படிர் என்று அடித்தார். என்ன திட்டினார் என எனக்கு காதில் விழவில்லை எனது மருமகளுக்கு தான் தெரியும். அதன் பிறகு நான் அரசு மருத்துவமனைக்கு வந்து உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

# IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.60/2022 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |
| Name : | | சரோஜா |
| Father's/Husband Name: | | சின்னய்யன் |
| Village : | | கொட்டரை |
| Taluk : | | ஆலத்தூர் |
| Age : | | 50 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 28.06.2022

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். போன வருடம் 30–ம் தேதி 11–வது மாதம் காலை 11.30 மணியளவில் எனக்கு தலைவலிக்கிறது என்று எனது மாமியாரிடம் தைலம் வாங்கி வர சொன்னேன். எனது மாமியார் தெருவில் போன போது என்னடி தெருவில் வர என சொல்லி தலை முடியை பிடித்து இழுத்து என்னடி தேவடியா இந்த தெருவில் வர கூடாது என்று சொல்லி சீலையை கிழித்து விட்டு தெருவில் கிடந்த குச்சியை எடுத்து கண்டபடி எதிரி அடித்தார். நான் கேட்டதற்கு வீட்டில் இருந்த அருவாளை எடுத்து கொண்டு வந்து என்னடி கேக்குற கேஸ் வேணும் னா போட்டுகிடி தேவடியா பறியாச்சி என்று சொல்லி திரும்ப அடித்தார். நான் பயந்து கொண்டே எனது மாமியாரை அழைத்து கொண்டு வந்து விட்டேன். நான் இருசக்கர வாகனம் மூலம் எனது மாமியாரை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.